1978 செப்டம்பர் 8]

திரு. கோ. சி. மணி : எனக்கு அவர் அண்ணன் அல்ல. இந்த அவையில் நான் ஒரு உறுப்பினர். அவர் ஒரு அமைச்சர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்படிப்பட்டவர்களுக்கு அண்ணன் இருக்க முடியாது. நகைச்சுவையை அனுபவிக்க மாட்டேன் என்கிறீர்களே !

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் இது மாதிரி அவையில் வேகமாகப் பேசுவது அவைக்கு நல்லதல்ல என்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 48 ஒத்திப்போடப்படு கிறது.

(முற்பகல் 11-00)

New Buses.

* 49 Q.—THIRU K. S. MANI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of new buses purchased by Pallavan Transport Corporation (Metro) with the aid of World Bank to ply in Madras City;

(b) whether it is a fact that all those new buses so purchased were allotted to only one depot; and

(c) the reason for not allotting those buses to other depots also in Madras City?

புதிய பேருந்துகள்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உலக வங்கியின் (World Bank) உதவியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பகுதி) சென்னை நகரில் ஓட்டு வதற்கு எத்தனை புதிய பேருந்துகளை வாங்கியுள்ளது ?

(இ) வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் அத்தனையும் ஒரே ஒரு பணிமனைக்கே அளிக்கப்பட்டன என்பது உண்மையா ?

(உ) சென்னை நகரில் உள்ள ஏனைய பணிமனைகளுக்கும் அப்பேருந்துகளை பகிர்ந்தளிக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 9—8—1978 நாளைய நிலவரப்படி 122 பேருந்துகளை வாங்கியுள்ளது.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 8

(முற்பகல் 11-00)

திரு. கோ சி. மணி : பழைய பேருந்துகள் எந்தப் பகுதியில் அதிகமாக ஓடுகின்றனவோ அங்கே அவற்றை மாற்றி புதியவற்றை ஓட்டுவதற்காகத்தான் புதிய பேருந்துகள் வாங்கப்படுகின்றன. ஆனால் அண்ணா நகர்ப் பகுதியில் பழுதடைந்த பேருந்துகள்தான் அதிக காலமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. புதிய பேருந்துகள் ஒன்றுகூட அந்தப் பகுதியில் விடப்படவில்லை. இதற்கு ஏதாவது அரசியல் உள்நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்ணா நகர்ப் பகுதியில்தான் நானும் வாழ்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டுப் பேசுகிறார் என்று எண்ணுகிறேன். மொத்தம் வாங்கிய 122 பேருந்துகளில் மந்தைவெளியில் 45-ம் தண்டையார்பேட்டையில் 66-ம அம்பத்தூரில் 4-ம் அண்ணாநகரில் 7-ம் ஓடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்தான் சரிவரப் புரிந்து கொள்ளாமல் வேறு நோக்கத்தில் கேட்கிறாரே தவிர, அண்ணா நகர்ப் பகுதியிலும் புதிய பேருந்துகள் ஓடுகின்றன.

திரு. கோ. சி.மணி : அண்ணா நகர்ப் பகுதியைப் பற்றிப் புரிந்து கொண்டதால்தான், இந்தக் கேள்வியையே கேட்டேன். புதிய பேருந்துகளில் 7 தான் அங்கே ஓடுவதாகச் சொல்கிறார்கள். மற்ற அத்தனையும் பழுதடைந்த நிலையில் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை ஏன் மாற்றவில்லை என்பதுதான் கேள்வி. இனி மேலாவது அதிகமாகப் புதிய பேருந்துகளை அங்கே விட அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பழுதடைந்த பேருந்துகள் எங்கேயும் ஓடவில்லை. பழுதடைந்துவிட்டால், உடனே அவை சரிபார்க்கப்பட்டுத்தான் ஓட்டப்படுகின்றன. பல இடங்களில் கூடுதல் பேருந்துகள் வேண்டுமென்ற மக்கள் கோரிக்கைக்கு இணங்க, புதிய பேருந்துகள் விடப்படுகின்றன.

திரு. க. அறிவழகன் : உலக வங்கியின் உதவியுடன் வாங்கியிருக்கின்ற புதிய பஸ்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. அவற்றில் நின்று கொண்டு பயணம் செய்யும் பயணிகள் வெளி உலகத்தைப் பார்க்க வசதி இல்லாதவகையில் அவை இருக்கின்றன. நின்றுகொண்டு பயணம் செய்கிறவர்கள்தான் அதிகமாக இருப்பதால், அதை மாற்றி அவர்கள் வெளிக் காட்சியைப் பார்க்கும் அளவுக்கு அமைக்கப்படுமா? புதிய பேருந்துகள் வாங்கினால், அவற்றில் அந்த வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு.சி. பொன்னையன் : பேருந்துகள் அப்படியே வாங்கப்படுவதில்லை. சேசிஸ்தான் வாங்கப்படுகின்றன. அவற்றின் 'பாடி' யைப் பொறுத்தவரையில், சற்று உயரமாக உள்ளன. அவற்றைச் சரி செய்யலாம். உறுப்பினர் அவர்களின் யோசனை ஆலோசிக்கப்படும்.

[1978 செப்டம்பர் 8

THIRU G. VASANTHA PAI: Sir, I am asking this with reference to the answer to (*a*) of the question and not to (*b*) and (*c*). When the Government orders these new buses with the aid of the World Bank, will the Government consider, in view of the increasing accidents which are taking place in the City by persons climbing the footboard, the introduction of buses which are available in foreign countries which shut the door with an automatic system available with the driver?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உறுப்பினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை அரசு பரிசீலித்தது. சென்னை நகரைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த தூரத்திற்கு ஒன்றாக பஸ் ஸ்டாப்புகள் இருப்பதால், மிக விரைவில் இந்த 'ஷட் டோர்'களை உபயோகிப்பதால் அவை பழுதடைந்து விடுமென்று கருதப்பட்டது. எந்த வகையில் அவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்று ஆலோசித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, in answer to the Hon. Minister's suggestion, I want to submit that the mechanism which is available with the driver is able to shut the door and open it at any minor or major stop and at any distance also. So, it can be adopted in this country.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதைத்தான் நான் குறிப்பிட்டேன். மாநகரில் மிகக் குறைந்த தூரத்தில் ஸ்டாப்பிங்குகள் இருப்பதால், அடிக்கடி அந்தக் கதவைத் திறந்து மூடும்போது பழுதடையும் என்று கருதப்படுகிறது. அதனால் அதை எப்படி நடத்துவது என்று ஆராய்ந்து வருகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: உலக வங்கியிலிருந்து வாங்கிய பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட பேருந்துகளைப் பெருநகர்ப் பகுதியில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளுக்கும் மாவட்டப் பகுதிகளுக்கும் அப்படிப்பட்ட வசதிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்படி உலக வங்கியின் மூலமாக வாங்கி விடப்படுகின்ற பேருந்துகள் அனைத்துப் பணிமனைகளுக்கும் ஒன்றாக மாவட்டங்களுக்கு அனுப்பப்படுமா? நல்ல வசூலில் ஓடிக்கொண்டிருந்த வேதாரண்யம் பஸ் ரூட்டை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அதை மாற்றி மீண்டும் அங்கே பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உலக வங்கியைப் பொறுத்தவரையில், மேட்ரோபாலிட்டன் சிட்டிகளுக்குத்தான் அது கொடுக்கிறது. அதன் அடிப்படையில்தான் வாங்கப்படுகின்றன. மாவட்டங்களிலும் அப்படி விடுவதற்கு சால

1978 செப்டம்பர் 8]

அமைப்புகள், பாலங்கள் அமைத்தல் போன்றவைகளை அமைத்து, பேருந்துகள் விடுவதற்குப் பொருள் உதவி செய்ய வேண்டுமென்று உலக வங்கியைக் கேட்டிருக்கிறோம். சாந்தாராம் அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். வேதாரண்யம் விஷயமாக, தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. க. அறிவழகன் : உலக வங்கி மூலமாக வாங்குகிற புதிய பஸ்கள் பழையன போல சாய்ந்த கோபுரங்கள் மாதிரி சாய்ந்துகொண்டு போவதில்லை. பழைய பஸ்கள் சாய்ந்தவாறு போய்க்கொண்டிருக்கின்றன. பொறியியல் துறையினரை வைத்து அவற்றைச் சரி செய்து ஸ்பிரிங் பிளேட் ஏதாவது பொருத்தி, புதிய பஸ்களைப் போல, நிமிர்ந்து செல்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பயணிகள் மிகுதியாக ஒரே பக்கத்தில் ஏறினால் அப்படித்தான் ஏற்படும். உறுப்பினர் கூறிய டெக்னிக் பற்றி விவரமாகத் தெரியவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : சென்னை புறநகர்ப் பகுதியில் உலக வங்கி உதவியுடன் வாங்கப்பட்ட 122 பேருந்துகள் ஓடுவதால், அங்கே முன்னால் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் கிராமப் புறங்களுக்கு அனுப்பப்பட்டனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களுக்குப் பதில் சொல்லும்போது கூறினேன். கூடுதல் பேருந்துகளாகத்தான் இந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. ஏற்கெனவே இருந்த பேருந்துகள் அந்தந்த வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

Training to Drivers and Conductors.

* 50 *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to train the bus Drivers and Conductors, particularly those working in Madras City to behave courteously with passengers and to inculcate the tendency of helping those who are new to city and others; and

(*b*) if not, whether any arrangements would be made to give such training ?